# கிருபையுள்ள வார்த்தை®

## KIRUBAIYULLA VAARTHAI

லூக்கா (LUKE) 4:22

VOL - 26
ஆண்டு சந்தா ரூ. 100/-

நவம்பர் - NOVEMBER
தனிப் பிரதி ரூ. 10/-

2025
வெளிநாட்டு சந்தா ரூ. 1,000/-




ஆசிரியர் Dr. பிலேமோன் ராஜா

புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை மீட்டமைக்கும் இதழ்

## இதழின் உள்ளே...


ஆசிரியர் உரை 3
பெண்கள் பகுதி 7
வாலிபர் பகுதி 9
சிறுவர் பகுதி 11



*In Memory of J.C. CHOATE*

*Guest Editors :* **Betty Choate, Jerry & Paula Bates**

*Editor :* **Dr. P.C. PHILEMON RAJA**

ஆசிரியர் குழு

**V. கிங்ஸ்லி ராஜா,** M.Th.,
**R. ஆண்டனி ராஜா,** D.Th.,
**E. ஜோசப் பிரதீப்,** B.Th., **C. கியாமிலஸ் கார்த்திக்,** B.Sc.,
**P. பேபி ராஜா,** D.Th., **P. பெவர்லி லிடியா** B.B.A.,

சட்ட ஆலோசகர்கள்
அட்வகேட் **B.** கருப்பசாமி பாண்டியன் B.A., B.L.
அட்வகேட் **V.** சுப்பிரமணியன் M.A., B.L.


## கிருபையுள்ள வார்த்தை TV நிகழ்ச்சிகள்

**தமிழன் T.V. யில்**

**ஞாயிறு காலை 7.00 மணி**

**நம்பிக்கை T.V. யில்**

**ஞாயிறு மதியம் 3.30 மணி**

செய்தியாளர்கள்

போதகர். **பிலேமோன் ராஜா** M.A., M.Th.,
(Director - JC School of Evangelism)

சகோ. **கிங்ஸ்லி ராஜா** M.Th.,
(இணை ஆசிரியர் – கிருபையுள்ள வார்த்தை)

**இந்த மாதம் பிறந்த நாள் மற்றும் திருமண நாள் காணும் வாசகர்கள் அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள்...**



மாதந்தோறும் பார்வையற்ற மாற்றுத்திறனாளிகளுக்கு அரிசு வழங்கப்படுகிறது.


**கிருபையுள்ள வார்த்தை**
நம்மை கிறிஸ்துவின் சீடனாய் உருவாக்கும்
உன்னதமானவரின் வார்த்தை

YouTube
@graciouswordcoc



**World Literature Publication :** Kirubaiyulla Vaarthai, Post Box No. 15, Arasaradi, Madurai - 625 016. India

ஆசிரியர் உரை

- P.C. பிலேமோன் ராஜா



# சீடத்துவம்
## DISCIPLESHIP

கிருபையுள்ள வார்த்தை வாசகர்கள் அனைவருக்கும், வாழ்வும் வழியும் உண்மையுமாகிய ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் மகிமையான நாமத்தில், எனது அன்பின் வாழ்த்துக்கள் மற்றும் ஜெபங்கள்

நவம்பர் மாதம் 17ம் தேதி சர்வதேச மாணவர்கள் தினமாக அனுசரிக்கப்படுகின்றது. ஆகையால் இந்த மாதம் உங்களுடன் சீடத்துவத்தினைப் பற்றி பைபிளிலிருந்து, பரிசுத்த ஆவியானவர் ஒத்தாசையுடன் தியானம் செய்வதில் அகமிழ்கின்றேன்.

Mathetes (சீடன்) என்ற கிரேக்க வார்த்தையானது, கற்றுக்கொள்வது என்று பொருள்படும் 'manthano' என்ற கீரேக்க வார்த்தையிலிருந்து வந்தது. இதன் பொருள் சீடன் (Disciple) கற்றுக்கொள்கின்றவன் (Learner) அல்லது மாணவன் (Pupil) என்பதாகும்.

இது ஒரு ஆசிரியரிடமிருந்து கற்றுக்கொண்டு பயிற்சி பெறும் அர்ப்பணிப்புள்ள சீடரைப்பற்றி விவரிக்கிறது. அதாவது ஒரு ஆசிரியருடைய அறிவுகளுக்கு முழு மனதுடன் ஒத்துழைக்கும் மாணவன், பயிற்சி பெறுபவர் அல்லது பின்பற்றுபவர். மாணவன் (Student) என்பதனை விட "சீடன்" என்பது பண்டைய சூழலில் மிகவும் துல்லியமானது. ஏனெனில் அது பின்பற்றுபவர் ஆசிரியருடன் சேர்ந்து வாழ்ந்து, கற்றுக்கொண்டு, பணிபுரியும் ஆழமான, தனிப்பட்ட உறவைக் குறிக்கிறது.

### 1. கிறிஸ்துவை அறிதல்

2 பேதுரு 3:18 "நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளருங்கள். அவருக்கு இப்பொழுதும் என்றென்றைக்கும் மகிமையுண்டாவதாக. ஆமென்."

சீடத்துவத்தின் முதல் நிலை என்பது கிறிஸ்துவை அறிதலாகும். கிறிஸ்துவை அறிதல் என்பது அவர் யார் என்பதனை அறிவது மட்டுமல்ல, அவர் என்ன போதித்தார் என்பதனை அறிவதின் மூலம், அவரை முழுமையாக அறிவதாகும். ஏனெனில் எவரொருவரும் கிறிஸ்துவின் போதனையை அறியாமல், கிறிஸ்துவை முழுமையாக அறிவது சாத்தியமற்றதாகும்.

ஆண்டவர் இயேசு, அனைத்து தேசத்தின் மக்களையும் தனக்கு சீடராக்கி, அவர்களுக்கு திருமுழுக்கு கொடுத்து, தான் கட்டளையிட்டயாவையும், கைக்கொள்ளும்படி அந்த சீடர்களுக்கு உபதேசம்பண்ணும்படி சகல அதிகாரத்தோடும் அப்போஸ்தலர்களுக்கு கட்டளையிட்டார் (மத்தேயு 28:18-20). ஏனெனில் எந்த ஒரு சீடரும், கிறிஸ்துவின் உபதேசத்தினை அறிவது என்பது மிகவும் அடிப்படையான அவசியமான செயலாகும்.

ஆண்டவர் இயேசு, மேல் வீட்டிலே, தான் சிலுவைக்கு செல்லும் முன்பாக, அப்போஸ்தலர்களோடு இறுதியாக ஜெபிக்கும்போது, பரம பிதாவினையும், தன்னையும் அறிவது தான் நித்திய வாழ்வு தரும் என்று ஜெபித்தார் (யோவான் 17:1-3). கிறிஸ்துவை அறிகின்ற அறிவு என்பது, அவரது சீடர்களை உலகத்தின் அசுத்தங்களுக்கு விலக்கி காக்க உதவுவதாக இருக்கின்றது (2பேதுரு 2:20). நம்மை நித்திய வாழ்விற்கு அழைத்தவராகிய கிறிஸ்துவை அறிகின்ற அறிவு என்பது தெய்வ பக்திக்கும், வாழ்விற்கும் தேவையானவற்றை அவரது வல்லமையின் வழியாக பெற்று தருவதாக இருக்கின்றது (2பேதுரு 1:3).

கிறிஸ்துவையும், அவரது உபதேசங்களையும் நாம் அறிந்துக்கொள்வதற்காகத்தான், பரிசுத்த ஆவியானவர் நமக்கு புதிய ஏற்பாட்டினை கொடுத்துள்ளார் (யோவான் 20:31, 2பேதுரு 1:21, 2தீமோத்தேயு 3:16,17). கிறிஸ்துவையும் அவரது

போதனையையும் புறக்கணிப்பது மாபெரும் தண்டனைக்குரியதாக இருக்கின்றது (யோவான் 12:48). கிறிஸ்துவின் உபதேசத்தினை உடையவரே, கிறிஸ்துவையும், பிதாவையும் உடையவராக இருக்கின்றார் (2யோவான் 9). கிறிஸ்துவையும் அவரது போதனைகளையும் அறிவதற்கு திருமறை (பைபிள்) ஒன்றே போதுமானதாகும். கிறிஸ்துவைப் பற்றி பழைய மற்றும் புதிய ஏற்பாட்டில் உண்டு. ஆனால், கிறிஸ்துவின் போதனை என்பது முழுவதுமே புதிய ஏற்பாட்டில் மாத்திரம் தான் உண்டு. நாம் கடைபிடிக்க வேண்டிய சுயாதீன பிரமாணமும் அது மாத்திரம் தான் (யாக்கோபு 1:25, எபிரெயர் 1:1,2) என்பதனை மறந்துவிட வேண்டாம். சிலர் இரண்டையும் கடைபிடிக்க முயலுகின்றனர் அது முற்றிலும் தவறான அணுகுமுறையாகும் (கலாத்தியர் 3:1,10,13,23-25; 5:1-5).

## 2. கிறிஸ்துவில் வளர்தல்

எபேசியர் 4:14,15 'நாம் இனிக் குழந்தைகளாயிராமல், மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப்போல அடிபட்டு அலைகிறவர்களாயிராமல், அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு, தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும், நாம் வளருகிறவர்களாயிருக்கும் படியாக அப்படிச் செய்தார்."

சீடத்துவத்தின் அடுத்த நிலை என்பது கிறிஸ்துவில் வளர்தலாகும். கிறிஸ்துவில் வளர, கிறிஸ்துவை போல் வளர முதலாவது வெறுக்க வேண்டியவைகளை வெறுக்க வேண்டும். ஆண்டவர் இயேசு, ஒருவர் தனக்கு சீடராகி தன்னை பின்பற்ற விரும்பினால், அவர் தன்னைத் தான் வெறுக்க வேண்டும் என்றார் (மத்தேயு 16:24). மேலும், தனக்கு உண்டானவைகளை வெறுக்காதவர் தனக்கு சீடராக இருக்க முடியாது (லூக்கா 14:33). தனது குடும்பம் மற்றும் உயிரையும் வெறுக்காதவர் தனக்கு சீடராக இருக்க முடியாது (லூக்கா 14:26) என்றும் சொன்னார்.

அன்பினை போதித்த கிறிஸ்து வெறுக்கவும் சொல்கின்றாரே? என்ன காரணம் என்பதனை அறிய வேண்டும். இதன் பொருள் எல்லார் மீதும் வெறுப்பினை உமிழ்வது அல்ல. நீங்கள் கிறிஸ்தவை பின்பற்றி நித்திய வாழ்விற்கு செல்ல தடையாக இருப்பது எதுவோ, அதனை தைரியமாக புறக்கணியுங்கள் என்பதாகும். எல்லாரையும் வெறுத்துவிட்டால், அவர்கள் அனைவரும் இரட்சிக்கபட வேண்டும் என்ற தேவ சித்தம் உடைந்துப் போய்விடுமல்லவா? (1தீமோத்தேயு 2:4; 2பேதுரு 3:9; மத்தேயு 18:14). சுய விருப்பம், சுய புத்தி, சுய ஞானம், சுய பலம். சுய கொள்கைகள் போன்ற சுயத்தினை வெறுப்பதே அதன் மேலான பொருளாகும்.

கிறிஸ்துவில் வளர, கிறிஸ்துவைப்போல் வளர வெறுக்க வேண்டியவைகளை வெறுத்தவர், அடுத்ததாக சுமக்க வேண்டியவைகளை சுமக்க வேண்டும். ஆண்டவர் இயேசு, தன்னைப் பின்பற்ற விரும்புகின்ற சீடர்கள், தங்களுக்குரிய சிலுவையை சுமக்க வேண்டும் என்றார் (மத்தேயு 16:24). மேலும், தங்களுக்கான சிலுவையை சுமக்கதாவர் தனக்கு சீடராக இருக்க முடியாது என்றார் (லூக்கா 14:27). கிறிஸ்துவின் சீடர்களுக்கு பாடுகளும் அருளப்பட்டிருக்கின்றது (பிலி 1:29), அதனை புதுமையென்று பயப்பட வேண்டாம் (1பேதுரு 4:12), அதன் வழியே நித்திய வாழ்வினை நோக்கி நாம் பயணிக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம் (அப்போ 14:22). இவைகள் தன் நிமித்தமாகவும், தன் போதனையின் நிமித்தமாகவும் வரும் என்று ஆண்டவர் இயேசு முன்னமே அறிவித்துள்ளார் (மத்தேயு 5:10-12) என்பதனை மறக்க வேண்டாம்.

கிறிஸ்துவில் வளர, கிறிஸ்துவை போல் வளர அடுத்ததாக நாம் செய்ய வேண்டியது அன்பு செலுத்தலாகும். கிறிஸ்து நம்மில் நேசித்தது போல, சீடர்கள் ஒருவரிலொருவர்; அன்பு செலுத்தலாகும். யோவான் 13:34,35 "நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்; நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன். நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள் என்றார்."

கிறிஸ்துவில் வளர, கிறிஸ்துவை போல் வளர,

அடுத்ததாக நாம் செய்ய வேண்டியது கனிகொடுத்தலாகும். கனி கொடுத்தல் என்றால் மற்றவர்களுக்கு நமது ஆண்டவர் இயேசுவைப் போல பலன் தருகின்ற வாழ்வாகும். யோவான் 15:8 "நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதனால் என் பிதா மகிமைப்படுவார், எனக்கும் சீஷராயிருப்பீர்கள்."

கிறிஸ்துவில் வளர, கிறிஸ்துவை போல் வளர, அடுத்ததாக நாம் செய்ய வேண்டியது நிலைத்திருத்தலாகும். ஆம், கிறிஸ்துவின் போதனைகளில் நிலைத்திருக்க வேண்டும். அதுவே கிறிஸ்துவில் நிலைநிறுத்தலாகும் யோவான் 8:31 "இயேசு தம்மை விசுவாசித்த யூதர்களை நோக்கி: நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள்." ஆகையால், நாம் கிறிஸ்துவிடமிருந்து கற்றுக்கொண்டவைகளில் வளர்வதோடு, கற்றுக்கொடுத்த அவரை போலவும் வளர்கின்றவர்களாக இருக்க வேண்டும்.

## 3. கிறிஸ்துவை பகிர்தல்

லூக்கா 24:46,47 "எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து பாடுபடவும், மூன்றாம்நாளில் மரித்தோரிலிருந்தெழுந்திருக்கவும் வேண்டியதாயிருந்தது. அன்றியும் மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது."

சீடத்துவத்தின் அடுத்த நிலை என்பது கிறிஸ்துவை பகிர்தலாகும். கிறிஸ்துவினுடைய சீடர்கள் ஒவ்வொருவரின் மிக முக்கியமான கடமை இதுவாகும். மனந்திரும்புதலின் செய்தி நானிலமெங்கும் பரவிட வேண்டும். மனுக்குலம் அனைத்தும் பாவமன்னிப்பை பெற்றிட வேண்டும். நமது ஆண்டவரும் குருவுமாகிய கிறிஸ்து, மானுடராக பிறந்து, மிகவும் துன்பப்பட்டு கோர சிலுவையில் குருசினில் குருதியெல்லாம் சிந்தி மரித்ததையும், அவர் மூன்றாம் நாள் உயிர்தெழுந்து பாவத்தினை, சாபத்தினை, பாதாளத்தினை, மரணத்தினை வென்றதினையும் அறிவிக்காவிடில், அவரது அடியார்களாக இருப்பதில் அர்த்தமில்லை (மத்தேயு 28:18-20).

கிறிஸ்துவை பகிராதிருப்பதற்கு சீடர்களாகிய நாம் அநேக சாக்குபோக்குகளை சொல்லுகின்றோம். மோசேயை கர்த்தர் எகிப்திற்கு பார்வோனிடம் அனுப்பிய போது, அவன் என்னை நம்பார்கள், என் வாக்குக்குச் செவிகொடார்கள், கர்த்தர் உனக்குத் தரிசனமாகவில்லை என்று சொல்லுவார்கள் என்றான் அல்லவா? அதேபோல சொல்கின்றோம்.

உலகமெங்கும் எல்லா மக்களுக்கும் நற்செய்தி சொல்வது தான் நமது வேலை. அதைக் கேட்டு விசுவாசித்து கீழ்படிகின்றவனுக்கு இரட்சிப்பையும், விசுவாசியாதவனுக்கு தண்டனையும் கொடுப்பது கர்த்தருடைய வேலை என்பதனை நினைவில்கொள்வோம். மாற்கு 16:15,16 "பின்பு, அவர் அவர்களை நோக்கி: நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான். விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்."

அடுத்ததாக, மோசே "நான் வாக்குவல்லவன் அல்ல நான் திக்குவாயும் மந்தநாவும் உள்ளவன்" என்று போக்கு சொன்னார். அதே போல நாமும், எனக்கு சரியாக சொல்ல தெரியாது, எனக்கு அவ்வளவு திறமையில்லை, ஞானமாக பேசத் தெரியாது என


### வாசகர்களின் கவனத்திற்கு

அன்பான வாசகர்களே!
உங்கள் ஆண்டு சந்தா தொகையை
G-Pay, PhonePe மூலம் அனுப்பி
உங்கள் சந்தாவை
புதுப்பித்துக் கொள்ளவும்.
நன்றி!

ஆண்டு சந்தா : ரூ. 100/-
No. 92 4421 4421

வங்கிக் கணக்கில் செலுத்த,
A/c Name : Kirubaiyulla Varthai
A/c No. : 57022317422
IFSC Code : SBIN0011068
Branch : SBI - Bye Pass Road Branch, Madurai.

சொல்கின்றோம். இதே நிலையில் இருந்த பவுலோ, சிறந்த வசனிப்போடு, ஞானத்தோடு பேசத் தெரியவில்லை என இருக்கவில்லை. கிறிஸ்துவிவை மாத்திரம் அறிவிக்க வேண்டும் என்ற தீர்மானத்தில் தீவிரமாக இருந்து அறிவித்தார். நாமும் அவ்வாறே இருக்க வேண்டும். 1 கொரிந்தியர் 2:1,2 "சகோதரரே நான் உங்களிடத்தில் வந்தபோது, தேவனைப் பற்றிய சாட்சியைச் சிறந்த வசனிப்போடாவது ஞானத்தோடாவது அறிவிக்கிறவனாக வரவில்லை. இயேசுகிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி, வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்திருந்தேன்."

அடுத்ததாக, மோசே "ஆண்டவரே, நீர் அனுப்பச் சித்தமாயிருக்கிற யாரையாகிலும் அனுப்பும்" என்று சொன்னார். நாமும் கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவிப்பது நம் வேலை அல்ல, அது ஊழியர் அல்லது வேறு யாராவது பார்த்துக்கொள்வார்கள். எனக்கு உலகத்தில் எவ்வளவோ பொறுப்புகள் இருக்கு என தவிர்க்கின்றோம். அல்லது "அறுப்புக்கு ஆட்களை அனுப்பும்" என்று வெறுமனே ஜெபித்துவிட்டால் கடமை தீர்ந்ததென்று நினைக்கின்றோம். மோசே அப்படி சொன்னபோது, கர்த்தர் ஒத்துக்கொண்டாரா? இல்லை. நாம் நற்செய்தி அறிவியாமல், நம் பொறுப்பினை தவிர்க்க சொல்லுகின்ற எந்த சாக்குபோக்குகளையும் கர்த்தர் ஏற்கமாட்டார் என்பதனை நினைவில் கொள்வோம் (1கொரிந்தியர் 9:15,16). ஏனெனில் சகல தேசத்தாருக்கும் நற்செய்தி அறிவிக்கபட வேண்டும் (மாற்கு 13:10), மனுக்குலம் முழுவதும் இரட்சிக்கப்பட வேண்டும் என்பதே (1தீமோ 2:4) அவரது சித்தமாகும். அவரது சித்தம் செய்யாதவர் அவருக்கு சீடராக இருக்க முடியாது மற்றும் பரலோகில் பிரவேசிக்கவும் முடியாது (மத்தேயு 7:21-23) என்று கர்த்தருடைய வார்த்தை நம்மை எச்சரிக்கின்றது.

## 4. கிறிஸ்துவிற்கு பணிவிடை செய்தல்

மத்தேயு 25:40 "அதற்கு ராஜா பிரதியுத்தரமாக: மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்பார்."

சீடத்துவத்தின் அடுத்த நிலை என்பது கிறிஸ்துவிற்கு சேவை (பணிவிடை) செய்தலாகும். நமது ஆண்டவர் இயேசு, இந்த பூமியில் இருந்த நாட்களில் அநேக மக்கள் நேரடியாக அவருக்கு சேவை (பணிவிடை) செய்தனர். வீட்டுக்கு அழைத்து உணவு கொடுத்து உபசரித்தனர், தங்கள் ஆஸ்திகளை அவருக்காக செலவழித்தனர், விலைமதிப்புமிக்க தைலங்களை அவருடைய பாதங்களில், தலையில் பூசினர், தனக்காக ஆயத்தம் செய்த புதிய கல்லறையை அவருக்காக கொடுத்தனர் என நிறைய பைபிளிலிருந்து அறிய முடியும். ஆனால் இன்றைய நாட்களில் நாம் நேரடியாக செய்ய இயலாது. ஆயினும், ஆண்டவருக்கு பணிவிடை செய்யலாம். இந்த சிறியறில் ஒருவருக்கு நாம் எதனை செய்கின்றோமோ, அதனை ஆண்டவர் இயேசுவிற்கே செய்கின்றோம் என ஆண்டவரே சொன்னார் (மத்தேயு 25:40).

மேலும், ஏழைகளுக்கு உதவுதல் என்பது கர்த்தருக்கு கடன் கொடுப்பது போன்றது என்றும் (நீதிமொழிகள் 19:17), தரித்திரருக்கு உதவுது நம்மைப் படைத்த கர்த்தரை கனப்படுத்தும் என்றும் (நீதிமொழிகள் 14:31) பைபிள் நம்மை ஊக்கப்படுத்துகின்றது. மேலும், நாம் கிறிஸ்துவினை சார்ந்தவர்களாக, அவருக்கு உரியவர்களாக இருக்கின்றபடியினால், அவர் நாமத்தினிமித்தம் நாம் நன்மை செய்கின்றவர்களாக இருக்க வேண்டும் (மாற்கு 9:41). அதை நாம் அன்பினாலே செய்ய வேண்டும் (கலாத்தியர் 5:13). அவ்வாறு செய்வது பிதாவை மகிமைப்படுத்தும் (மத்தேயு 5:16). கர்த்தர் அதற்கேற்ற பலனை நமக்கு தந்தருளுவார் மத்தேயு 10:42 "சீஷன் என்னும் நாமத்தினிமித்தம் இந்தச் சிறியரில் ஒருவனுக்கு ஒரு கலசம் தண்ணீர்மாத்திரம் குடிக்கக் கொடுக்கிறவனும் தன் பலனை அடையாமற் போகான் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்."

இறுதியாக, பிரியமானவர்களே, கிறிஸ்துவின் சீடர்களாக இருக்கின்ற நாம் அதற்கேற்ற சீடத்துவத்துடன் இருப்போம். பிதாவை மகிமைப்படுத்துவோம். கிறிஸ்துவின் நாமத்தினை உயர்த்திப் பிடிப்போம். எல்லாம் வல்ல பிதா தாமே, நம்மை பெலப்படுத்தி, வழிநடத்துவாராக.

– அன்புடன், ஆசிரியர்

# ஜெபத்தை கேட்பவரே



பிரியமானவர்களே, இயேசு ராஜாவின் பெயரில் வாழ்த்துக்கள்! ஜெபங்கள்!

தேவன் நம் ஜெபங்களை கேட்கின்றார். ஆம் பிரியமானவர்களே நம் பிதாவாகிய தேவனிடம் நாம் நம் தேவைகளை கேட்பது நமது உரிமையாகும். அவரைப் போற்றி துதிப்பது, நன்றி செலுத்துவது, விண்ணப்பம் வைப்பது, பிறருக்காக ஜெபிப்பது, பாவ மன்னிப்பு கேட்டு ஜெபிப்பது, இக்கட்டான சூழ்நிலையில் அவசர தேவைக்காக ஜெபிப்பது, அமைதியாக மனதை ஊற்றி ஜெபிப்பது என்று பல்வேறு ஜெபங்களை (நம் ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் இருக்கிறது) நாம் ஏறெடுக்கிறோம். "ஜெபம்" என்பது நாம் நம் தேவனோடு (இயேசு கிறிஸ்துவின் மூலமாக) நேரடியாக பேசுவதாகும். வேதாகமம் முழுவதும் மனிதர்கள் பலவிதமான முறைகளில் ஜெபிப்பதை நாம் காணலாம்.

### துதி ஜெபம் (Praising Prayer):

சங்கீதம் 8:1 – தேவனுடைய மகிமையை நாம் சொல்லி ஜெபிப்பது அவருக்கு கனம், மகிமை, போற்றுதல் இவைகளை பயபக்தியோடே செலுத்துவது.

சங்கீதம் 150:6 – நம் இருதயத்தை நன்றியுடன் நிரப்பி தேவனை கனப்படுத்துதல்.

(எபி. 13:15; சங். 145:1; ஏசா. 25:1)

### நன்றி ஜெபம் (Prayer of Thanksgiving):

இது தேவன் நம் வாழ்வில் செய்கின்ற ஒவ்வொரு நன்மைகளையும் நினைத்து நன்றி சொல்லும் ஜெபம் (1 தெச. 5:18) எல்லாவற்றிலும் நன்றி செலுத்துங்கள். நன்றி ஜெபம் நம்மை மகிழ்ச்சியுடன் நம்பிக்கையையும், உறுதியையும் வளர்க்கிறது (1 நாளா. 16:34,35).

### பாவமன்னிப்பு ஜெபம் (Prayer of forgiveness of sin):

இது நாம் செய்யும் பாவங்களை, தவறுகளை தேவனிடம் கூறி மன்னிப்பு கேட்கும் ஜெபம் (சங். 51:4).

(சங். 32:5) நம்மை அழைத்தவர் பரிசுத்தர் எனவே நாமும் பரிசுத்தமாக வாழ முயற்சி எடுக்க வேண்டும். தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடைய மாட்டான், அவைகளை அறிக்கை செய்து விட்டுவிட வேண்டும்.

### மனு விண்ணப்பம் (Prayer of Supplication):

இது நமக்காகவும், பிறருக்காகவும் தேவனிடம் நாம் கேட்கும், வேண்டும் ஜெபமாகும். பிறருக்காக

(தொடர்ச்சி... ௮ம் பக்கம்)

## அறிந்து கொள்வோம்

## மாதம் ஒரு "பூ" புன்னை



புன்னை (Calophyllum inophyllum) மிகவும் அழகிய தோற்றம் கொண்ட மரங்களுள் ஒன்றாகும். இதன் இலைகள் சற்றுப் பெரியவாகவும், பளபளப்பாகவும் இருக்கும். வெண்ணிறப் பூவும் மஞ்சள் நிறப் பூந்துகட் பகுதியும் கொண்டது. புன்னை மரத்தின் அறிவியற் பெயர் (Calophyllum inophyllum) என்பதின் முதற்பகுதி Calophyllum என்பதன் பொருள் அழகான இலை. calo என்பது கிரேக்கச் சொல்லான (காலோசு) என்பதில் இருந்து பெற்றது. அதன் பொருள் அழகானது, அருமையானது என்பது. phyllum என்பது இலை. சிங்கள மொழியில் இது தொம்ப எனவும், மலையாளத்தில் புன்னாகம் எனவும் அழைக்கப்படுகிறது.

இது இந்தியாவின் கிழக்கு, மேற்கு கடற்கரையோரப் பகுதிகள், மியன்மார், மலேசியா, ஆஸ்திரேலியா, இலங்கை, கிழக்கு ஆபிரிக்கக் கரையை அண்டிய தீவுகள் ஆகிய இடங்களில் காணப்படுகின்றது. இது ஏனைய பல இனத் தாவரங்கள் வளர முடியாத, வறண்ட மணற்பாங்கான கடற்கரையோரங்களில் வளரக்கூடியது. இந்தியாவில் மும்பாய்க்கும் இரத்தினகிரிக்கும் இடைப்பட்ட பகுதியிலும், அந்தமான் தீவுகளிலும் பெருமளவில் காணப்படுகின்றது. தமிழ்நாட்டிலும் கடற்கரையோரப்பகுதிகளில் காணலாம்.

இதன் தோற்றம் காரணமாக, நகரப் பகுதிகளில் அழகுக்காக சாலையோரங்களில் நட்டு வளர்க்கப் படுகின்றது.

ஜெபிப்பது என்பது ஒரு ஆசீர்வாதமான செயலாகும் (மத். 5:44; 1 தீமோ. 4:1,2; பிலி. 4:6,7).

**அவசர ஜெபம் (Prayer of petition in distress):**

நாம் நம்முடைய துன்பம், நோய், ஆபத்து அல்ல மிக கடினமான நேரம், துயரம் ஆகியவற்றின்போது அதை தேவனிடம் சொல்வது (சங். 107:19; பிலி. 4:6,7; சங். 91:1,2; சங். 34:7; நெகே. 8:10; சங். 32:7; 124:8).

**தனி ஜெபம்:**

இயேசு அடிக்கடி தனிமையான இடங்களுக்குச் சென்று ஜெபம் செய்தார் (லூக்கா 5:16). தேவனை நம்பும் ஒவ்வொரு விசுவாசிக்கும், ஜெபத்திற்கும் அதிகமான தொடர்பு இருக்கிறது. இதை இயேசுவிடமிருந்து நாம் கற்றுக்கொள்ள முடியும்.

**ஆசீர்வாதத்திற்கான ஜெபம் (A Prayer of Blessing):**

நாம் பிறரின் ஆசீர்வாதத்திற்காக ஜெபிக்க வேண்டும். இவ்வாறாக பவுல் சொல்கிறார் உங்கள் அன்பு அறிவிலும், ஆழத்திலும் பெருகவும், சிறந்ததை நீங்கள் பகுத்தறிந்து, கிறிஸ்துவின் நாளுக்காகத் தூய்மையாகவும் குற்றமற்றவர்களாகவும் இருக்கவும், இயேசு கிறஸ்துவின்மூலம் நீதியின் கனியால் நிரப்பப்படவும், தேவனுக்கு மகிமையும் துதியும் உண்டாவதாக. இதுவே என் பிரார்த்தனை (பிலி. 1:9-11).

வேதத்தில் அநேக பெண்கள் தங்கள் வாழ்வின் சூழ்நிலைகளை கடந்து வரவும், வாழ்வில் கிறிஸ்துவுக்குள் வெற்றி அடையவும் தொடர்ந்து கிறிஸ்துவுக்குள் வாழவும் உதவியாக, ஆயுதமாக இருந்தது ஜெபம்.

**குறிப்பிடத்தக்க சில பெண்கள்:**

(1 சாமு. 1) - அன்னாள்; (எஸ்தர் 4:15,16) - எஸ்தர்; (யோசு. 2; எபி. 11) - ராகாப்; மத். 15:22-28; மாற்கு 1:24 - 30) - கானானிய பெண்; (லூக்கா 1:5-80) - எலிசபெத்; (லூக்கா 1:46-55) - இயேசுவின் தாய் மரியாள்; (லூக்கா 2:36-38) - அன்னாள்.

நாமும் தினந்தோறும் நம் தகப்பனிடம் (பேசுவோம்) ஜெபம் செய்வோம், ஜெபத்திற்கு என்று ஒரு தனிப்பட்ட நேரம், இடம் ஆயத்தப்படுத்துவோம். ஜெபம் என்றுமே நம் வாழ்வில் வெற்றியையும், மாற்றத்தையும் கொண்டு வரும். ஆமென்!

**“ஜெபமே வெற்றி”**

பிரியமுடன்: சகோதரி. **பெவர்லி கிங்ஸ்லி**

## Gospel Through Media by Evangelism Team

**Philemon & Kingsly in Tamil: Tamilan TV:** Sunday 7:00 - 7:15 am.
**Nambikkai TV:** Sunday 3:30 - 4:00 pm.

**Rajanayagam & Benny Martin in Tamil: Nambikkai TV:** Tuesday 6:30-7:00 am & Friday 7:30 - 8:00 am

**Arjunan in Tamil:** Every Monday - Saturday 6:00 pm on **Joy TV.**

**Hindi TV program: Sunny, Francis, & Vinay David:** Sunday (7:00-7:30) pm, Friday 8:00-8:30 pm All on **Subha Sandesh** Hindi Channel

**P. K. Varghese in Malayalam:** Every Saturday 6:00-6:30 am on **Jai Hind TV.**

**Joshua & Ricky Gootam in Telugu:**
Every Sunday at 6:00-6:30 p.m. on **Subhavartha TV.**
Saturday at 6:00-6:30 a.m. on **Araadhana TV.**
Every day at 7:00 a.m. and 3:00 p.m. on **Kanthi TV** in A. P. only.

**Amul Bansod – Aurangabad (Marathi)**
**MCN News** channel: Monday, Wednesday, Friday – 7:30 AM to 8:00 AM.

வாலிபர் பகுதி...

# இயேசு கடலின் மீது நடந்தார்

பிரியமான வாலிபர்களே! ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள். நாம் தொடர்ந்து ஆண்டவர் இயேசு செய்த அற்புதங்களையும், அதன் ஆவிக்குரிய நோக்கங்களையும் கற்று வருகின்றோம். அந்த வரிசையில் இந்த மாதம் இயேசு கடலின்மீது நடந்ததை பற்றி படிக்கலாம். இந்த சம்பவம் மத். 14:22,23; மாற்கு 6:47-51; யோவா. 6:16-21-ல் பதிவு செய்யப்பட்டிருப்பதை வாசிக்க முடியும்.

இந்த சம்பவத்தில் சீடர்களோடு இயேசு இல்லை. காற்று படகுக்கு எதிராக வீசியது. பெருங்காற்றினால் கடல் கொத்தளித்தது. சீடர்களோ தாங்கள் சரியான திசையில் போய்க்கொண்டிருப்பதாக எண்ணினர். அநேக நேரம் பிரயாசப்பட்டனர் (யோவான் 6:19). ஒன்று நாம் புரிந்துகொள்ள வேண்டும். கடலோ, காற்றோ, மழையோ, படகு பிரயாணமோ சீடர்களுக்கு புதியதொன்றும் அல்ல.

வாலிப நாட்களில் உலகம் பழகின ஒன்றுதான். ஆனால் விழுந்துபோக அநேக வாய்ப்புண்டு. மீண்டும் மீண்டும் அது இச்சையை கொண்டு துரத்திக் கொண்டேயிருக்கும். சாத்தான்போல! சீடர்கள் நடுக்கடலில் சிக்கி தவித்ததைப்போல வாலிபமும் உலகில் சிக்கித் தவிக்க வைக்கும். எப்போதென்றால் இயேசு இல்லாது இருக்கும்போது.

சீடர்கள் படும் கஷ்டத்தை இயேசு கண்டு நடுராத்தியில் கடலின்மேல் நடந்து, சூழ்நிலையை கட்டுப்படுத்தி, சீடர்களை பெலப்படுத்தினார்.

இரண்டு பாடங்களை இயேசு சீடர்களுக்கு கற்றுக் கொடுத்தார். ஒன்று கைவிடமாட்டார், இரண்டு நம்மை வழிநடத்துவார்.

இந்த சம்பவத்தின் துவக்கத்தில் சீடர்களை அக்கறைச் செல்ல அனுமதித்தது. இயேசுதானே பிறகு என்ன? சொன்னவர் சீடர்களோடு இல்லாவிட்டாலும் அவர் கைவிடமாட்டார், காப்பாற்றுவார் என்கின்ற விசுவாசம் இவர்களிடம் இல்லாமற்போயிற்று. நாமும் புரிந்துகொள்ள வேண்டும். வாலிப நாட்களில் இச்சையில் சிக்கி என்ன செய்வதென்று கவலைப்படுவதைவிட்டு இயேசுவை நோக்கிப் பாருங்கள். அவரே இந்த சூழலில் இருந்து காப்பாற்ற முடியும், விடுவிக்க முடியும், இயேசுவிடம் தைரியமாய் வருகின்றவர்களாய் இருப்போம். அனுதினமும் வேதத்தோடும், ஜெபத்தோடும் அந்த நாளை துவங்குவோம். எத்தனை போராட்டம் வந்தாலும் ஆண்டவர் இயேசு நமக்காக நின்று போராட்டத்தை தாண்டிவிடும் விசுவாசத்தைத் தருவார்.

அடுத்ததாக இயேசு சீடர்கள் சந்தித்த கடுமையான சூழலை மாற்றி இயல்பு நிலைக்கு கொண்டு வந்தார். இயேசு சீடர்களிடம் எதிர்பார்த்தது விசுவாசம். அதை அவர்கள் கொண்டிருந்தார்களானால் கடினமான சூழலில் விசுவாச கிரியை வெளிப்பட்டிருக்கும். ஆனாலும் அவர்களை காப்பாற்றி மீண்டும் அவர்கள் அவிசுவாசத்தோடு இராதபடிக்கு வைராக்கியமான வாழ்வை இயேசுவுக்காக வாழவும் அவர்களை நடத்தினார்.

பாடுகள் என்பது தேவன் நமக்கு வைக்கும் தேர்வு. பெருங்காற்று, எதிர்காற்று, இருட்டு என்பது நாம் சந்திக்கிற உலகத்தின் போராட்டங்களைக் குறிக்கிறது. படகு என்பது நமது குடும்பம், வேலை, தொழிலைக் குறிக்கிறது. தண்டு வலிக்கிறதில் கஷ்டமாயிருந்ததைப்போல நமது குடும்பமும், வேலையும் நமக்குப் பாராமாய்த் தோன்றும். ஆனால் இயேசுவுக்கு எதுவுமே பாரமாய்த் தோன்றியதில்லை. அவர்களின் உண்மையான நிலையை இயேசு கண்டார். மலையின்மேல் இருந்தாலும், சீஷர்களின் நிலைமையை அறிந்து, இரவின் நாலாம் ஜாமத்தில் கடலின்மேல் நடந்து அவர்களிடத்தில் வந்தார்.

இயேசுவோடிருந்த சீஷர்களே மிகப்பெரிய ஆபத்தை எதிர்கொள்ள வேண்டியதிருந்தது. அதேபோல் தேவனுடைய பிள்ளைகளாகிய நம்முடைய வாழ்க்கையிலும் எதிர்பாராத நேரத்தில் ஆபத்தான சூழ்நிலைகளைச் சந்திக்க

வேண்டியதிருக்கலாம். இருளின் மத்தியில் சீஷர்கள் பயந்த சூழ்நிலையில் இருந்ததால் இயேசு நடந்து வருகிறதைப் பார்த்து ஆவேசம் என்று சத்தமிட்டனர். இதற்கு முன் அவர்கள் இதைப் போன்ற எந்த ஆவேசத்தையும் பார்த்ததில்லை. எனவே அலறினார்கள். உண்மையில் அவர்கள் இயேசு வருவதைப் பார்த்து மகிழ்ச்சியடைந்திருக்க வேண்டும். இயேசுவினுடைய மகிமையையும் மகத்துவத்தையும், அவர் தன்னுடைய சீஷர்கள் மேல் கொண்டிருந்த அன்பையும் அவர்கள் கண்டுகொள்ளவில்லை என்றறிகிறோம்.


இதனால் இயேசு வருத்தப்பட்டதாகவோ, கோபப்பட்டதாகவோ சொல்லப்படவில்லை. அப்பொழுது அவர்களுடைய கண்கள் திறக்கப்பட்டது உடனே இயேசு மறைந்து போனார். அப்பொழுது அவர்கள் கலங்கி பயந்து ஒரு ஆவியைப் காண்கிறதாக நினைத்தனர். கர்த்தர் தான் சமுத்திரம் புரண்டு வந்தபோது கதவுகளால் அடைத்தவர், (யோபு 38:8) அவைகளிடம் அதன் எல்லையைக் குறித்து அதற்குத் தாழ்ப்பாள்களையும், கதவுகளையும் போட்டு, இம்மட்டும் மிஞ்சி வராதே என்றவரும் அவரே (யோபு 38:10,11) இயற்கை மட்டுமல்ல, கடலும் கூட அவருக்குக் கட்டுப்படும் என்றறிகிறோம். சீஷர்களின் படகு அமிழ்ந்து விடுமே என்று ஓடி வந்த இயேசு, நமது வாழ்க்கையும் அமிழ்ந்துபோக விட மாட்டார். மாற்கு மட்டுமே அவர்கள் வருத்தப்படுவதாக கூறியிருந்தார். இது சபைக்குப் பொருத்தமாகும்.

மலையில் இயேசு ஜெபம்பண்ணிக் கொண்டிருந்ததுபோல பரலோகத்தில் நமக்காக பரிந்துபேசிக் கொண்டிருக்கிறார். இயேசு மறுபடியும் படகுக்கு வந்ததுபோல மறுபடியும் சபையைத்தேடி வரப்போகிறார். இந்த அற்புதத்தைப் பார்த்து இயேசுவை யாரென்று அறியாதவர்கள் அறிந்தனர். இயேசுவைத் தேடாதவர்களும் தேடினர். பேதுரு அமிழ்ந்து போகையில் இயேசு உடனே வந்து தூக்கி எடுத்ததைப்போல, இயேசு நம்முடைய போராட்டங்களிலும், கஷ்டங்களிலுமிருந்து உடனடி தீர்வை நமக்களிப்பார்.

கர்த்தர் பாதாளத்தின் வல்லமையிலிருந்து நம்மை இரட்சிக்கிறார். பாவ பழக்க வழக்கத்திலிருந்து நம்மை இரட்சிக்கிறார். சத்துருக்களின் பிடியிலிருந்தும் பிசாசின் பிடியிலிருந்தும் நம்மை இரட்சிக்கிறார்.

– உங்கள் அண்ணன் **JP**

## பொதுவான செய்திகள் தமிழ் பின்கணக்கு நுட்பம்



தமிழ் பின்கணக்கு நுட்பம் என்ன மற்றும் அது எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது?

எண்கள் மற்றும் அளவுகளை பின்னாலே எளிதாக எண்ணும் முறை

பள்ளி மாணவர்களுக்கு வழக்கமான கணக்குகளை விரைவாக செய்ய உதவும் பழமையான தமிழ் முறை

எட்டு அங்குலம், ஒரு சாண், ஐந்து கட்டை போன்ற பாரம்பரிய அளவீட்டு முறைகள்

**உதாரணம்:**

ஒரு முழம் இரு சாண், ஒரு சாண் பனிரெண்டு கட்டை விரல், ஒரு கட்டை விரல் எட்டு நெல்

ஒரு நெல் எட்டு எள், ஒரு எள் எட்டு கண் மயிர், ஒரு கண் மயிர் எட்டு இம்மி, ஒரு இம்மி எட்டு அணுக்கள்.....

ஒரு பொருளின் உயரம் 8 அங்குலம் என்றால், அதை ஒவ்வொரு ஜான் மற்றும் கட்டை அடிப்படையில் பின்கணக்கில் எண்ணலாம்: 1 சாண், 2 சாண்.... 5 கட்டை.

இதன் மூலம் மாணவர்கள் எளிதாக அளவுகளை மனதில் வைத்து கணக்கிட முடியும்.

பள்ளிகளில் மாணவர்களுக்கு விரைவான கணக்குகள், திறமையான எண்ணிக்கை முறை கற்றுக்கொள்ள உதவும்.

# பாபேல் கோபுரம்

கிறிஸ்துவுக்குள் அன்பான செல்லப்பிள்ளைங்களா! எல்லாரும் எப்படி இருக்கீங்க? இந்த மாதத்திற்காக கடவுளுக்கு நன்றி சொன்னீங்களா? பரிசுத்த கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.


பிரியமான செல்லங்களா!!! மனிதனுக்கு மொழி எந்த அளவிற்கு அவசியம்? என்பதை என்றாவது நீங்கள் யோசித்துள்ளீர்களா? அப்படி இல்லையென்றால் இன்றைக்கு கொஞ்சம் யோசித்துப் பார்ப்போமா?. உதாரணத்திற்கு நம் அனைவருக்கும் தாய் மொழி தமிழ். நம்முடைய வீட்டிலே நாம் ஒருவருக்கு ஒருவர் தகவல்களை பரிமாறிக்கொள்ள இந்த மொழி நமக்கு உதவுகிறது. திடீரென நாம் பேசும் மொழி நம்முடைய அப்பாவிற்கோ அல்லது அம்மாவிற்கோ புரியவில்லை என்றால் என்ன ஆகும் என்று யோசித்துப் பாருங்களேன். இப்படி மனிதனுக்கு மிகவும் அவசியமான மொழி எப்படி இத்தனை மொழிகளாக உருவானது என்பதைப் நம்முடைய வேதாகமத்திலிருந்து கற்றுக் கொள்வோமா!

நோவா காலத்தில் ஏற்ப்பட்ட பெரிய வெள்ளத்திற்குப் பிறகு பூமியிலே ஒரே மொழியும் ஒரே விதமான பேச்சு வழக்கும் இருந்தது. ஒரே குடும்பத்தில் இருந்து உருவான மக்கள் கூட்டம் கிழக்கே இருந்து பிரயாணம் பண்ணும்பொழுது, சிநெயார் என்னும் நாட்டிலே சமமான நிலப்பரப்பைக் கண்டு அங்கே அவர்கள் அனைவரும் குடியேறினார்கள். அவர்கள் அனைவரும் ஒரே மொழியை உடையவர்களாக இருந்தனர். அவர்களிடம் கல்லுக்குப் பதிலாக செங்கல்லும், சாந்துக்குப் பதிலாக நிலக்கீலும் இருந்தது. அவர்கள் ஒரே மொழியை உடைய கூட்டமாக இருந்ததினால் அவர்களால் அதிகம் செயல்பட முடிந்தது.

பிறகு அவர்கள் அனைவரும், நாம் அனைவரும் பூமி முழுவதற்கும் சிதறிப் போகாதபடிக்கு, நமக்கென்று ஒரு நகரத்தையும், வானத்தை எட்டும் அளவிற்கு உயரமுள்ள ஒரு கோபுரத்தையும் கட்டி, நம்முடைய பெயருக்கு பெருமை உண்டாகும்படி அதைக் கட்டுவோம் வாருங்கள் என்று திட்டம் செய்தனர்.

அருமையான செல்லங்களா!!! சில நேரங்களில் நாம் செய்யும் திட்டங்களும் இவர்களைப் போலதான் செய்கின்றோம் அதாவது, நமக்கு பெருமை உண்டாக்கும்படி சில திட்டங்களையும் செயல்களையும் செய்கின்றோமே தவிர கர்த்தரை மகிமைப்படுத்த மறந்து விடுகின்றோம்.

கர்த்தர் மனிதர்கள் கட்டும் நகரத்தையும்



கோபுரத்தையும் பார்வையிடுவதற்கு வானங்களிலிருந்து இறங்கினார். அப்பொழுது கர்த்தர் மக்கள் அனைவரும் ஒரே கூட்டமாக இருக்கிறார்கள், அவர்கள் அனைவருக்கும் ஒரே மொழியும் இருக்கிறது. அதனால் அவர்கள் அனைவரும் இப்படிப்பட்ட நகரத்தையும் கோபுரத்தையும் கட்டுவதற்கு திட்டம் செய்துள்ளனர். மேலும் அவர்கள் செய்ய நினைத்தது ஒன்றும் தடைபடாது என்றும் நினைத்துள்ளனர் என்றார். குழந்தைகளா!!! நம்முடைய கர்த்தர் நம் அனைவரின் மனதையும் அறிந்தவர். ஆதலால் நாம் மனதில் கூட கர்த்தருக்கு விரோதமாக எதுவும் செய்யக் கூடாது.

கர்த்தர் வானங்களில் இருந்து கீழே இறங்கி அந்த மக்கள் கூட்டத்தின் மொழியை தாறுமாறாக்கினார். அதாவது ஒருவர் பேசும் மொழியை மற்றவர் அறியாதபடிக்கு மாற்றினார், அதனால் அவர்கள் அனைவரும் அந்த கோபுரம் மற்றும் நகரம் கட்டும் பணியை கைவிட்டுவிட்டு, பூமி முழுவதும் சிதறிப் போனார்கள். இதனாலேயே பூமி முழுவதும் இத்தனை மொழிகள் உள்ளன. பூமி முழுவதும் இருந்த ஒரே மொழியை கர்த்தர் இந்த இடத்திலே தாறுமாறாக்கின படியால் இந்த இடத்திற்கு பாபேல் என்ற பெயர் உண்டானது.

கர்த்தருக்குப் பிரியமான செல்லங்களா!!! இந்தப் பாடத்திலிருந்து நாம் முக்கியமான ஒன்றைக் கற்றுக்கொள்ள முடியும், அதாவது நாம் என்ன திட்டம் செய்தாலும் அல்லது எந்த ஒரு செயல் செய்தாலும் அதினால் நம்முடைய கர்த்தர் மகிமைப்பட வேண்டும். எந்தக் காரியத்தில் கர்த்தர் மகிமைப்படுவார் என்று நீங்கள் கற்றுக்கொள்ள விரும்பினால். அனுதினமும் பைபிள் வாசித்துக் கற்றுக்கொள்ளலாம். மேலும், வாரந்தோறும் தவறாமல் சபைக்குச் சென்று கற்றுக் கொள்ளுங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

**மனப்பாட வசனம்: சங்கீதம் 34:4**

"நான் கர்த்தரைத் தேடினேன், அவர் எனக்குச் செவிகொடுத்து, என்னுடைய எல்லாப் பயத்துக்கும் என்னை நீங்கலாக்கி விட்டார்."

– சகோ. சந்தோஷ்குமார் மாகாளியப்பன்

சிறுவர் பகுதி

# தாவீது - தவறுதலும், மனந்திரும்புதலும்

( 1 சாமுவேல் 12:1–14 )


கர்த்தருடைய செல்ல குட்டிங்களா! கர்த்தருடைய கிருபையும், தயவும் உங்களோடு இருப்பதாக. இந்த மாதம் தாவீது ராஜாவை பற்றி நாம் படிக்கலாம்.

இஸ்ரேல் தேசத்திலே இரண்டு மனிதர்கள் இருந்தார்கள். ஒருவன் பணக்காரன், மற்றொருவன் ஏழையான மனுஷன். இந்தப் பணக்காரனுக்கு ஆடு, மாடுகள் வெகுதிரளாக இருந்தது. ஆனால் அந்த ஏழையான மனுஷனுக்கோ ஒரே ஒரு ஆட்டுக்குட்டி தான் இருந்தது. அந்த ஆட்டுக்குட்டியை ஒரு குழந்தையைப் போல செல்லமாக வளர்த்துக் கொண்டு வந்தான். அந்த ஆட்டுக்குட்டியும் அவன் மடியிலே விளையாடி தவழ்ந்து கொண்டிருந்தது.

ஒருநாள் அந்தப் பணக்காரன் வீட்டுக்கு விருந்தாளி ஒருவன் வருகிறான். அவன் சாப்பிடுவதற்கு நல்ல உணவை கொடுக்க வேண்டும் என்பதற்காக தன் ஆடு மாடுகளில் அனேகம் இருந்தும் அவைகளை அடித்து உணவு சமைக்காமல், அந்த ஏழையான மனிதனை அடித்து, துன்புறுத்தி கொலை செய்து, பிறகு அவனுடைய ஆட்டுக்குட்டியை எடுத்து, அதை அடித்து, தன் விருந்தாளிக்கு உணவை சமைத்தான்.

பிள்ளைகளே! நீங்கள் நன்றாக கவனியுங்கள். ஒரு பணக்காரன் தன்னிடம் உள்ளதை எடுத்துக் கொடுக்காமல் பிறருடைய பொருளின் மீது தகாத ஆசை வைத்து அதை எடுத்துக் கொண்டான். இந்த செயல் கர்த்தருக்கு விரோதமான செயல். கர்த்தர் நம் எல்லோருக்கும் கட்டளை கொடுத்திருக்கிறார். அதாவது பிறனுக்குண்டான யாதொன்றையும் இச்சியாதிருப்பாயாக என்று சொல்லியிருக்கிறார்.

இந்த பெரும் பாவத்தை செய்தது இஸ்ரேல் ராஜாவாகிய தாவீது தான். தன்னிடம் அநேக செல்வாக்குகள் இருந்தும் பிறருடைய பொருளின் மீது தகாத ஆசை வைத்து, கர்த்தரை அசட்டைபண்ணி, கர்த்தருடைய கட்டளையை



மீறி நடந்தான். கர்த்தர் தாவீது ராஜா மீது மிகவும் கோபம் கொண்டு அவன் குடும்பத்திற்கு மிகப்பெரிய தண்டனையை கொடுத்தார். தாவீது ராஜா தான் செய்த பாவத்தை குறித்து மனஸ்தாபப்பட்டு கர்த்தரிடம் மன்னிப்பு கேட்கக்கூடியவனாக இருந்தான்.

ஆம் பிள்ளைகளே! தாவீது ராஜாவிடமிருந்து கற்றுக்கொள்ளக் கூடாத ஒரு செயல் பிறருடைய பொருள் மீது தகாத ஆசை வைத்து எடுத்துக் கொண்டான். ஆனால் இந்த சிறுவயதில் இருக்கிற நீங்கள் நண்பர்களுடைய பொருளின் மீதோ, மற்றவர்களின் பொருளின் மீதோ ஆசைப்பட்டு எடுத்துக் கொள்ளாமல் நாடோறும் கர்த்தருக்கு பயந்து அவருடைய கட்டளைகளை என்னவென்று கேட்டு அறிந்து அதில் நடந்து கொள்ளுங்கள்.

உங்களுக்கு ஒன்று தேவைப்பட்டால் அதை கர்த்தரிடம் கேளுங்கள். அவர் மறுக்காமல் உங்களுக்கு அதை கொடுப்பார். கர்த்தருடைய தயவு, அன்பு, இரக்கம் உங்களோடு இருக்கட்டும். நீங்கள் நன்றாக படித்து கர்த்தருக்கு சேவை செய்யக்கூடிய பிள்ளைகளாய் நாளைய எதிர்காலத்தில் மலரும்படியாக ஆண்டவர் இயேசு நாமத்திலே உங்களை அன்போடு கேட்கிறேன். ஆமென்.

**மனப்பாட வசனம்: மத்தேயு 3:8**

“மனந்திரும்புதலுக்கு ஏற்ற கனிகளைக் கொடுங்கள்”

– சகோ. பீட்டர்

## சிறுவர்களுக்கான கேள்விகள்

1. பாபேல் கோபுரத்தை எதற்காக கட்டியெழுப்ப மக்கள் முடிவு செய்தார்கள்?
2. தாவீது ராஜாவிடமிருந்து கற்றுக் கொள்ளக்கூடாததும், கற்றுக்கொள்ள வேண்டிய செயலும் என்ன?
3. யாக்கோபு மனந்திருந்திய பின் செய்த செயல் என்ன?
4. ஆபிரகாம் எலியேசரிடம் கூறிய காரியம் என்ன?
5. எலியேசரிடமிருந்து நீங்கள் கற்றுக்கொண்ட காரியம் என்ன?

சிறுவர் பகுதி

# யாக்கோபு
## (ஏமாற்றுதல் மற்றும் உண்மையாயிருத்தல்)

**ஆதியாகமம் 27-ம் அதிகாரம்**

கடவுளுக்கு பிரியமான செல்லப்பிள்ளைகளா! எப்படியிருக்கிறீர்கள், உங்களை ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துகிறேன்.

வேதாகமத்தில் யாக்கோபு ஏமாற்றக்கூடிய பாவம் செய்தான், ஏசா வேட்டையாடி வீடுதிரும்பும்போது, யாக்கோபிடம் பயிற்றங் கூழ் கேட்டான். பயிற்றங் கூழைக்கொடுத்து சேஷ்டபுத்திரபாகத்தை எழுதி வாங்கிக் கொண்டான். பிற்பாடு தன் தப்பனையும் ஏமாற்றுகிறான்.

ஏசாவின் கையில் ரோமம் அதிகமாக இருக்கும். அதனால் இவன் ஆட்டு ரோமத்தை தன் கையில் போர்த்துகொண்டு, தன் அப்பாவுக்கு வயதான தினாலும், பார்வை மங்கலாக இருந்ததினாலும் சுபலபமாக ஏமாற்றி ஆசீர்வாதத்தை பெற்றுக் கொண்டான்.

ஆனால், யாக்கோபு தான் பெற்றுகொண்ட நன்மையை எதுவும் அவன் அனுபவிக்காமல், ஆசீர்வாதத்தை இழந்து வெறும் கையோடே தன் மாமா லாபானுடைய வீட்டுக்கு போனான்.

பிள்ளைகளா! அப்பாவை ஏமாற்றுவது, அம்மாவை ஏமாற்றுவது, ஊழியக்காரரை ஏமாற்றுவது, பள்ளி



ஆசிரியரை ஏமாற்றுவது என்பது தன்னையே ஏமாற்றுவதுக்கு சமம்.

யாக்கோபு தன் மாமா வீட்டில் கொடுத்த வேலையை உண்மையாய் செய்தான், கஷ்டபட்டு வேலை செய்து, நேர்மையாயிருந்தான். திரும்பி வரும்போது இரண்டு மடங்கு ஆசீர்வாதத்தை பெற்றுக்கொண்டான்.

நீங்களும் படிகிற காரியங்களில் உண்மையாய் இருக்கிறீர்களா? இல்ல மொபைல்போனில் கேம் விளையாடுவது, டி.வி பார்ப்பது என்று பொழுதுபோக்கிக் கொண்டிருக்கிறீர்களா? அம்மாவுக்கும், அப்பாவுக்கும் உண்மையாய் இருக்கிறீர்களா? உண்மையாய் இருப்பதற்கு கஷ்டப்படுகிறீர்களா? கர்த்தர் உங்களையும் அபரிவிதமாக ஆசீர்வதிப்பார்.

**மனப்பாட வசனம்: நீதிமொழிகள் 28:20**

"உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதங்களைப் பெறுவான்"


**— சகோ. அன்பு ஏசுதாஸ்**

### சிறுவர் பகுதி பதில் எழுதியவர்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | M. ஜோனத்தான் | - | கரூர் |
| 2. | V. ஏஞ்சல் ஜோயன்னா | - | மதுரை |
| 3. | A. சாம்குமார் | - | பெருமாள் வலசு |
| 4. | D. டே∴ப்னி | - | சென்னை |
| 5. | D. ஜூனித்தா | - | சென்னை |
| 6. | S. ஆலன் காலேப் | - | இராணிபேட்டை |
| 7. | S. ஜூடித் ஆராதனா | - | இராணிபேட்டை |
| 8. | A. ஆடின் ∴போயோ | - | இராணிபேட்டை |
| 9. | S. ஜோசுவா | - | இராணிபேட்டை |
| 10. | A. ஹானா ஜோதிராணி | - | மதுரை |
| 11. | M. அபி பிலேமோன் | - | எழுகம்வலசு |
| 12. | J. நவீன் பீட்டர் | - | மதுரை |
| 13. | J. கிறிஸ்டினா ஜாய்ஸ் | - | மதுரை |
| 14. | S. ஜூடா லியோ | - | ரஸ்தா |
| 15. | G. ஜெர்லின் | - | ரஸ்தா |

சிறுவர் பகுதி

# ஆபிரகாமும், எலியேசரும்



ஹாய் குட்டீஸ்! உயிர்த்தெழுந்த ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன்,

ஆபிரகாமுக்கு வயதுசென்று முதிர்வயதானபோது, தன் வீட்டிலுள்ளவர்களில் வயதில் மூத்தவரும், தனக்கு உண்டான எல்லாவற்றிக்கும் அதிகாரியுமாகிய எலியேசர் என்னும் தன் ஊழியக்காரனை கூப்பிட்டு: நீ என் தேசத்துக்கும் என் இனத்தாரிடத்துக்கும் போய், என் குமாரனாகிய ஈசாக்குக்குப் பெண்கொள்வேன் என்று, வானத்துக்குத் தேவனும் பூமிக்குத் தேவனுமாகிய கர்த்தர்பேரில் எனக்கு ஆணையிட்டுக்கொடுக்கும் படிக்கு, நீ உன் கையை என் தொடையின்கீழ் வை என்றார்.

அந்த ஊழியக்காரன் தன் கையைத் தன் எஜமானாகிய ஆபிரகாமுடைய தொடையின்கீழ் வைத்து, இந்தக் காரியத்தைக்குறித்து அவனுக்கு ஆணையிட்டுக் கொடுத்தார்.

அந்த ஊழியக்காரனும் தன் எஜமானுடைய ஒட்டகங்களில் பத்து ஒட்டகங்களையும். விலையுயர்ந்த பொருள்களையும் அவன் தன்னுடனே எடுத்துக்கொண்டு மெசொப்பொத் தாமியாவிலுள்ள ஆபிரகாமினுடைய ஊருக்குப் போனார்.

அவர் அந்த ஊருக்குப் புறம்பே ஒரு தண்ணீர்த் துரவண்டையிலே (கிணறு) தன் எஜமானுடைய ஒட்டகங்களோடு வந்தபோது, அது பெண்கள் வந்து தண்ணீர் மொண்டுகொண்டுபோகும் மாலை வேளையாயிருந்தது. அப்பொழுது அவர் தனக்குள்ளே சொல்லிக்கொண்டு என்ன தெரியுமா? என் எஜமானுடைய தேவனாயிருக்கிற கர்த்தாவே, இன்றைக்கு நான் வந்த காரியத்தை வாய்க்கப்பண்ணி, இதோ, நான் இந்தத் தண்ணீர்த் துரவண்டையிலே நிற்கிறேன், இந்த ஊராருடைய பெண்கள் தண்ணீர் மொள்ளப் புறப்பட்டு வருவார்களே. நான் குடிக்க உன் குடத்தைச் சாய்க்கவேண்டும் என்று நான் சொல்லும்போது: குடி என்றும், உன் ஒட்டகங்களும் குடிக்கும்படி வார்ப்பேன் என்றும் சொல்லும் பெண் எவளோ, அவளே நீர் உம்முடைய ஊழியக்காரனாகிய ஈசாக்குக்கு நியமித்தவளாயிருக்கவும், என் எஜமானுக்கு அநுக்கிரகம் செய்தீர் என்று நான் அதினாலே அறியவும் செய்தருளும் என்று வேண்டிக் கொண்டான்.

அவன் இப்படிச் சொல்லி முடிக்கும் முன்னே ஆபிரகாமுடைய சகோதரனாகிய நாகோரின் மகனாகிய பெத்துவேலுக்கு பிறந்த ரெபேக்காள் குடத்தை தன் தோள்மேல் வைத்துக் கொண்டு வந்தாள். அவள் தன் குடத்தை நிரப்பிக்கொண்டு ஏறிவரும்போது அந்த ஊழியக்காரன் வேண்டிக் கொண்டபடியே அவள் செய்தாள். அவனை அவள் வீட்டாருடைய அனுமதியோடு தன் எஜமானுடைய மகனுக்கு மனைவியாகும்படி அழைத்துக்கொண்டு போனான்.

பிரியமான குட்டீஸ்! எலியேசர் தன் எஜமானான ஆபிரகாமின் சொல்லுக்குக் கீழ்ப்படிந்து, அவர் சொன்னபடியே அனைத்து காரியங்களையும் செய்து வெற்றியும் கண்டதுபோல, நீங்களும் கர்த்தர் உங்களுக்குச் சொல்கிறதுபோல எல்லா காரியத்திலேயும் கீழ்ப்படிந்து, கர்த்தருக்கு உகந்த பிள்ளைகளாக வாழவும், வளரவும் முற்படுங்கள். ஆமென்.

**மனப்பாட வசனம்: எபேசியர் 6:1**

"பிள்ளைகளே, உங்கள் பெற்றாருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள், இது நியாயம்."

– சகோதரி. குயினி பிரதீப்

# நவம்பர் மாத கேள்விகள்
## (ரோமர் புத்தகத்தில் இருந்து)



1. பவுல் எது துவக்கி, எதுவரைக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார்?
2. கெங்கிரேயா ஊர் சபைக்கு ஊழியக்காரி யார்?
3. பவுலின் பிராணனுக்காகத் தங்கள் கழுத்தைக் கொடுத்தவர்கள் யார்?
4. கர்த்தருக்குள் பவுலுக்கு மிகவும் பிரியமானவன் யார்?
5. கிறிஸ்துவுக்குள் உத்தமன் யார் என்று பவுல் கூறினார்?
6. கிறிஸ்து நம்மை ஏற்றுக்கொண்டதுபோல, நாம் என்ன செய்ய வேண்டும்?
7. பவுல், எங்கெல்லாம் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பூரணமாய்ப் பிரசங்கித்திருக்கிறேன் என்று சொன்னார்?
8. மற்றொருவனுடைய அஸ்திபாரத்தின்மேல் கட்டாதபடிக்கு, பவுல் என்ன செய்தார்?
9. பலமுள்ளவர்களாகிய நாம் நமக்கே பிரியமாய் நடவாமல், எப்படி நடக்க வேண்டும்?
10. பவுலையும் சபையனைத்தையும் உபசரித்து வந்தவன் யார்?

**பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் : 05-12-2025**

அனுப்ப வேண்டிய முகவரி : **சகோதரி. பேபி ராஜா**
45C/1, சர்ச் லேன், காரனேசன் தெரு,
அரசரடி, மதுரை - 625 016.
செல் : 92 4421 4421, 92 4431 4431

## சென்ற இதழின் பதில்கள்

| | |
|---|---|
| 1. ரோமர் 12:8 | 6. ரோமர் 14:13 |
| 2. ரோமர் 12:16 | 7. ரோமர் 14:17 |
| 3. ரோமர் 12:18 | 8. ரோமர் 14:23 |
| 4. ரோமர் 13:8 | 9. ரோமர் 15:4 |
| 5. ரோமர் 14:6 | 10. ரோமர் 15:13 |

## சென்ற இதழின் கேள்விகளுக்கு பதில் எழுதியவர்கள்

| | | |
|---|---|---|
| 1) | Mrs. பியூலா ஜேசுராஜன் | புதுவை |
| 2) | Mrs.P. சமாதானம் பீட்டர் | விருதுநகர் |
| 3) | S. ஜெபமணி | தென்காசி |
| 4) | G. ஏஞ்சலம்மாள் | மதுரை |
| 5) | M.S. ஜேம்ஸ் | திண்டுக்கல் |
| 6) | P. ரேச்சல் ஜானிமா | நெல்லை |
| 7) | Mrs. தெல்மா ஸ்டான்லி | மதுரை |
| 8) | M. ராஜா | கரூர் |
| 9) | Mrs. C. வள்ளி சிதம்பரம் | கரூர் |
| 10) | Mrs. ஹெலன் திலக் | தூத்துக்குடி |
| 11) | Y. ஜெயசுதா பொன்செல்வி | சென்னை |
| 12) | Mrs. சாந்தி வில்லியம் | புதுக்கோட்டை |
| 13) | A. லலிதா | புதுக்கோட்டை |
| 14) | Mrs. A. அன்னத்தாய் ஆல்பர்ட் | தூத்துக்குடி |
| 15) | Mr. தாமஸ் ராபின்சிங் | பெரம்பலூர் |
| 16) | Mrs. ஸ்டெல்லா ஜெபக்குமார் | நெல்லை |
| 17) | J. ஜான்சி | ஆனைமலை |
| 18) | M. ஈஸ்வரி முருகன் | கரூர் |
| 19) | Mrs. R. சரோஜா | தென்கலம் |
| 20) | S.G. சேகர் | இராணிபேட்டை |
| 21) | R. ஞானசிரோன்மணி | மதுரை |
| 22) | A. டேவிட் ஜெயசந்திரன் | மதுரை |
| 23) | J. கிறிஸ்டோபர் தாஸ் | நாகர்கோயில் |
| 24) | Mrs. பெட்ரீஷியா டேவிட் | சேலம் |
| 25) | J. கிறிஸ்டோபர் சாந்தகுமார் | மதுரை |
| 26) | C. வைலட் கிறிஸ்டோபர் | தளவாய்புரம் |
| 27) | S. ஷீபா ஞானவின்சா | டோனாவூர் |
| 28) | Mrs. சாந்தி ஜோயல் | திருச்சி |
| 29) | J.V. சுந்தரபாய் வில்லியம் | சேலம் |
| 30) | M. பியூலா சாந்தி | ஈரோடு |
| 31) | Dr. இவாஞ்சலின் ஜோன்ஸ் | சேலம் |
| 32) | Mrs. A. இமல்டா சுந்தர்சிங் | ஈரோடு |
| 33) | Mrs. இந்திரா பாண்டி | மதுரை |
| 34) | Mrs.D. குளோரி திலகவதி | சென்னை |
| 35) | Mrs. சூரிய பிரியா | மதுரை |
| 36) | M. அன்பழகன் | தங்கமேடு |
| 37) | S. பாக்கியராஜம் | மதுரை |
| 38) | Mrs. ஆட்லின் ஆனந்தன் | மதுரை |
| 39) | A. அரவிந்த் | மதுரை |
| 40) | P. ஷைனி | காங்கேயம் |
| 41) | Mrs. J. ஜெயராணி ஜான் | மதுரை |
| 42) | N. ஜான் செல்லையா | மதுரை |
| 43) | A. கார்பஸ் பிலேமோன் | மதுரை |
| 44) | Mrs. ராணி குமரன் | கரூர் |
| 45) | S. கார்த்திக் | கரூர் |
| 46) | S. பேபி சந்தோஷ்குமார் | தங்கமேடு |
| 47) | D.I. அன்பு சுதந்திரம் | ஏர்வாடி |
| 48) | Mr. டேவிட் ராஜ் | அனவரதநல்லூர் |
| 49) | S. அசோக்குமார் பிரின்ஸ் | தூத்துக்குடி |
| 50) | Mrs. ஹெப்ஸிபா தாமஸ் | படப்பை |
| 51) | P.S. ருக்மணி | ஈரோடு |
| 52) | Mrs. J. பூங்கொடி | முத்தூர் |
| 53) | Mr. தமிழரசன் | நாமக்கல் |
| 54) | Mrs. மேரி ராஜ் | மதுரை |
| 55) | S. டேவிட் சாந்தகுமார் | வல்லம் |
| 56) | A. ரோஸ்மேரி | சென்னை |
| 57) | Mrs. தேவி ராஜாசிங் | திருப்பூர் |
| 58) | V. மைனாவதி வசந்த் | தங்கமேடு |
| 59) | Mrs. பெரில் பாஸ்கர் | படப்பை |
| 60) | Mrs. சாந்தி ஜோயல் | திருச்சி |
| 61) | Mrs. பியூலா ஜேசுராஜன் | புதுவை |
| 62) | Mr. ராஜன் | மதுரை |

தொடர்ந்து இப்பகுதியில் பங்குபெறும் அனைவருக்கும் வாழ்த்துக்கள் !


Place of Publication : 45 C/1, CHURCH LANE, CORONATION STREET, ARASARADI, MADURAI - 16.
Printed & Published by P.C. PHILEMON RAJAH
Printed at THEE CLASSIC PRINTERS, 27, KAKA THOPPU, MADURAI - 1 94421 23819
Registered News Paper No. : TNTAM/2011/42166
Postal Registration No. : TN/MA/67/2024 - 2026
Date of Publication : 9th November 2025
Posted at Arasaradi HPO on 10th & 11th November 2025

# கிருபையுள்ள வார்த்தை வெளியிட்டுள்ள சிறப்பு புத்தகங்கள்




அன்பார்ந்த வாசகர்களே! இந்த அனைத்து புத்தகங்களையும் உங்கள் ஆத்மீக வளர்ச்சிக்கு பயன்படுத்திக்கொள்ளும்படி வேண்டுகிறோம். ரூபாய் 100/- மட்டும் அனுப்பி இப்புத்தக தொகுப்பை பெற்றுக்கொள்ளுங்கள்!

## தபால் வழி பைபிள் பாடங்கள்





## கைபிரதிகள்



உங்கள் சுவிசேஷ ஊழியத்திற்கு கைபிரதிகள் பல்வேறு தலைப்புகளில் பாதி விலையில் கிடைக்கும். விபரங்களுக்கு : 92 4421 4421, 92 4431 4431

## BIBLE STUDY BOOKS IN ENGLISH




AVAILABLE FOR SPECIAL PRICE!

If undelivered please return to :

EDITOR
KIRUBAIYULLA VAARTHAI
P.O. Box No. 15, Arasaradi,
Madurai - 625 016. India
biblecourseindia@gmail.com
@graciouswordcoc
92 4421 4421, 92 4431 4431

To

Visit www.graciousword.org to read kv magazine online
follow us in facebook : NT Gospel Restorers